1972 ஆகஸ்டு 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசு, தமிழ் நாட்டில் மாநிலத் திட்டக்குழு அமைப்பதை வரவேற்றிருக்கிறது. மத்திய அரசின் திட்ட அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களே அதை வரவேற்றுப் பேசியிருக்கிறார். அது மாத்திரமல்லாமல், அவர்கள் திட்டக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் இந்த மாநிலத் திட்ட ஆணைக்குழு செயல் படுவதைப் பற்றி அவர்கள் ஆராய்ந்து பார்த்து. மத்திய திட்ட ஆணைக்குழுவைச் சேர்ந்த நீண்ட கால திட்டப் பிரிவு இயக்குநர் அவர்களைச் சென்னைக்கு அனுப்பியிருந்தார். அவர் மாநில திட்ட ஆணைக்குழுவோடு விவாதித்தார்.

* 147 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the State Planning Commission has evolved any plan to reduce the unemployment problem in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) மாநிலத் திட்ட ஆணைக்குழு குறிக்கோள்கள் பலவற்றை எய்தும் திட்டம் ஒன்றை வகுப்பதில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒன்று இம் மாநிலத்தில் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையைக் குறைப்பதாகும்.

திரு. என். கே. பழனிசாமி: வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு எவ்வளவு செலவாகும், அதில் மத்திய சர்க்காருடைய பங்கு என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளையெல்லாம் இப்பொழுது திட்ட ஆணைக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. ஆராய்ந்து முடிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு, மத்திய அரசாங்கத்தினுடைய பங்கு பற்றி நாம் யோசிக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு சில சிறப்புத் திட்டங்களை அமைத்திருக்கிறது. அதே மாதிரி நமது மாநில அரசும் ஏதாவது சிறப்புத் திட்டம் தீட்டுவதற்கு உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருளாதார வளர்ச்சியின் காரணமாகப் பெரிய தொழிற்துறைகளை விரிவு படுத்துவதன் மூலமாக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் இதுவரையில் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இப்பொழுது நம்முடைய மாநிலத் திட்ட ஆணைக்குழு, அதற்கு நேர்மாறாக, வேலை வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்துப் பெரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற வகையில் அதை ஆராய்ந்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : வேலை வாய்ப்பின்மையைத் தீர்ப்பதற்குத் திட்டம் இடும்போது படித்து வேலையில்லாம லிருப்பவர்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறார்களா ? படிக்காமல் கிராமப் புறங்களில் வேலையில்லாமலிருக்கும் மக்களையும் கணக்கில் எடுத்து அதற்கான திட்டம் வகுக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் முதன்மையாக, படித்து வேலை இல்லாமல் இருக்கிறவர்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். அதன் தொடர்பாக, கிராமப் புறங்களில் படிக்காமலும் வேலையில்லாமலும் இருக்கின்றவர்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

Schools run by Slum Clearance Board

* 148 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whethr any Swedish Social Service Organisation is offering assistance to the Slum Clearance Board to run schools at tenements areas; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை ; (இ) இந்த வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்கு தமிழ் நாட்டில் வேறு சோஷல் சர்விஸ் ஆர்கனைசேஷன், பள்ளி நடத்துவதற்கு உதவித் தொகை ஏதேனும் கொடுத்து வருகிறதா ?